சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No. 174/2023

பெயர் : பெரியகருப்பன்
தகப்பனார் பெயர் :முத்தழகு
கணவர் பெயர் :
வயது :65
கிராமம் :மேலூர்
வட்டம் :மேலூர்
தொழில் :விவசாயம்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

12.01.2026

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ கூடுதல் பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 17.12.2020 தேதியிட்ட இந்த வழக்கின் பிரதிவாதி செல்வராஜ் எனக்கு வழக்கு சொத்து தொடர்பான சொத்தை பொறுத்து எழுதி கொடுத்துள்ள அசல் அடமான பத்திரம் வா.சா.ஆ.6. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.7. அதை பிரதிவாதி பெற்றுகொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.8. பிரதிவாதி வழக்கறிஞர் எனது வழக்கறிஞருக்கு கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.9.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Sub Judge

Melur